வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 05.05.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 119 | பக்கங்கள் : 08

## 59 ஆண்டு கால திராவிட கட்சிகள் ஆதிக்கம் முடிவு;

# தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் விஜய்!

### 108 தொகைதிகளை கைப்பற்றியது த.வெ.க




சென்னை, மே. 05

தமிழக சட்டசபை தேர்தலில் யாரும் எதிர்பாராத வகையில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. முதல் தேர்தலிலேயே வெற்றி வாகை சூடி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக உயர்ந்துள்ளது.

07

## யாழில் பறந்தது த.வெ.க. கொடி!



யாழ்ப்பாணம், மே. 05

தமிழக தேர்தல் முடிவுகள் வெளியாகிய நிலையில் அதில் தமிழக வெற்றிக் கழகம் வரலாறு காணாத வெற்றி பெற்றது.

இதனையடுத்து வடக்கு - கிழக்கிலும் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜயின்

07

## விஜய்க்கு மோடி வாழ்த்து



சென்னை, மே. 05

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழ கத் தலைவர் விஜய் வெற்றி பெற்றதையடுத்து பிரதமர் நரேந் திர மோடி விஜய்க்கு வாழ்த்து

07

2.5 மில்லியன் டொலர் மோசடி

## கணினி, தொலைபேசிகளையும் தீவிரமாக ஆராய்கிறது சி.ஐ.டி.!

கொழும்பு, மே. 05

திறைசேரியிலிருந்து 2.5 அமெரிக்க டொலர் நிதி, மூன்றாம் நபரின் கைகளுக்கு சென்ற சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி காவல்துறை அத்தியட்சகர் எவ்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, திறைசேரியில் உள்ள கணினிகள், மடிக்கணினிகள், தொலைபேசிகள் மற்றும்

07

## சிறை அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து கைதி மரணம்!

கொழும்பு, மே. 05

கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த கைதி ஒருவர், சிறை அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து உயிரிழந்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களம் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர் பொரளை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சிறை அதிகாரிகளுடன் ஏற்பட்ட வாக்குவா தத்தைத் தொடர்ந்து அவர் திடீரென நோய்வாய்ப்பட்டதாகவும், பின்னர் அவர் உயிரிழந்ததாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

07

## தி.மு.கவின் கோட்டையில் ஸ்டாலினுக்கு படுதோல்வி!

சென்னை, மே. 05

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் எவரும் எதிர்பாராத வகையில், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) வேட்பாளர் வி.எஸ். பாபுவிடம் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளார்.

07

## செம்மணி புதைகுழிக்குள் குழந்தையின் என்புக்கூடு!

### நேற்று 4 என்புக்கூடுகள் மீட்பு



யாழ்ப்பாணம், மே. 05

செம்மணி மனித புதைகுழியில் இருந்து குழந்தையின் என்புக்கூட்டு தொகுதி உள்ளடங்கலாக 4 என்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

07

## ரங்க நிஷாந்த மரண அறிக்கை சந்தேகம் புதிய குழு அமைக்கக் கோரும் கம்மன்பில

கொழும்பு, மே. 05

மர்மமான முறையில் மரணமடைந்த நிதி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ரங்க நிஷாந்தவின் மரணம் மற்றும் அது தொடர்பான மரணப் பரிசோதனை அறிக்கை என்பன பாரிய சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாக பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று எதுல்கோட்டேயிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், ரங்க நிஷாந்தவின் மரணம் தற்கொலையாக இருக்கலாம் என மருத்துவக் குழு முடிவெடுத்துள்ளபோதிலும், அது ஒரு முழுமையான பரிசோதனை அல்ல என சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஆரம்பத்திலேயே இது தற்கொலை எனக்

07

## கட்டுப்பணம் இழந்த சீமான்!



சென்னை, மே. 05

காரைக்குடி தொகுதியில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கட்டுப்பணம் இழந்து தோல்வி அடைந்துள்ளார். த.வெ.க. வேட்பாளர் பிரபுவிடம் சுமார் 42 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் சீமான் தோல்வி அடைந்துள்ளார். இது நா.த.கவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடி தொகுதியில் வெல்வாரா என்ற எதிர்பார்ப்பு சாமானிய மக்களிடையே அதிகரித்திருந்தது. இம்முறை

07

## தேசிய ஒற்றுமைக்கான முடிவுகளில் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை!

### கம்பன் விருது விழாவில் ஜனாதிபதி



கொழும்பு, மே. 05

சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழும் நாடு தேவை என்றும், தேசிய ஒற்றுமைக்காக எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளை எக்காரணம் கொண்டும் பின்வாங்க மாட்டோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

07

## மன்னாரில் மலசலகூடக் குழிக்குள் துண்டாடப்பட்ட கணவனின் சடலம்!

### மனைவி பொலிஸாரினால் கைது



மன்னார், மே. 05

மன்னாரில் வீடொன்றின் மலசலகூடக் குழியில் இருந்து ஆணொருவரின் சடலம் துண்டாட்டப் பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒன்றாக மது அருந்தியோர் இடையே ஏற்பட்ட மோதல் கொலையில் முடிவு!

## குருநகரில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே. 05

யாழ்ப்பாணத்தில் ஒன்றாக மது அருந்தியவர்கள் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்துள்ளது.

சம்பவத்தில் குருநகர் பகுதியை சேர்ந்த எபிசியஸ் ஜெஸ் எமன் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குருநகர் புதுமை மாதா தேவாலயத்துக்கு அருகில் நண்பர்கள் இருவர் ஒன்றாக இருந்து மது அருந்தியுள்ளனர். அதன்போது, இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், திடீரென ஒருவர் மற்றையவர் மீது மதுப் போத்தலால் தலையில் பலமாகத் தாக்கியுள்ளார்.

அதில் தலையில் படுகாயமடைந்த நபர் இரத்த வெள்ளத்தில் மயங்கிச் சரிந்த நிலையில், அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், தாக்குதலை மேற்கொண்ட குருநகர் பகுதியை சேர்ந்த நபரை கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்தை முன்னெடுக்க சீனா புதிய நிபந்தனை

கொழும்பு, மே. 05

அம்பாந்தோட்டையில் அமையவுள்ள 3.7 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு, சீனா புதிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது.

உற்பத்தியாகும் எரிபொருளில் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படும் பங்கை அதிகரித்தால் மட்டுமே, சினோபெக் நிறுவனம் இத்திட்டத்தைத் தொடரும் என சீனா அறிவித்துள்ளது. முதலில் எட்டப்பட்ட உடன்படிக்கையின்படி, உற்பத்தியில் 80 வீதத்தை ஏற்றுமதி செய்யவும், 20 வீதத்தை மாத்திரம் இலங்கையில் விற்பனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், 20 வீத விற்பனைப் பங்கு இத்திட்டத்தைச் சமநிலைப்படுத்தப் போதுமானதல்ல எனவும், அதனை 30 வீதமாக உயர்த்த வேண்டும் எனவும் சீனா தற்போது வலியுறுத்தியுள்ளது. நாளாந்தம் இரண்டு இலட்சம் பீப்பாய்கள் மசகு எண்ணெய்யைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட இந்தத் தொழிற்சாலை, இலங்கையில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய நேரடி வெளிநாட்டு முதலீடாகும்.

அதேவேளை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலையில் முன்னெடுக்கப்படும் எரிசக்தித் திட்டங்களினால், அம்பாந்தோட்டைத் திட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. எரிபொருள் சேமிப்பு நிலையங்களின் தட்டுப்பாடு மற்றும் உலக சந்தையில் நிலவும் தளம்பல்களுக்கு மத்தியில், சீனாவினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய கோரிக்கை குறித்து அரசாங்கம் தற்போது தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. (அ)

# உரப் போக்குவரத்து கட்டணம் அதிகரிப்பு

## விவசாயிகள் அவதி

கொழும்பு, மே. 05

சிறுபோகத்திற்கான உரங்களை விநியோகிக்கும்போது, விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் 50 ரூபாவாக இருந்த இந்தக் கட்டணம், தற்போது 300 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

கொழும்பில் இருந்து விவசாய சேவை மையங்களுக்கு உரங்களைக் கொண்டு செல்வதற்காக விவசாயிகளிடம் இது வரை வசூலிக்கப்பட்ட கட்டணமே இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு மூடை உரத்தைப் பெற்றுக்கொள் வதற்காக விவசாய சேவை மையங்களினால் தற்போது 9,550 ரூபாய் வசூலிக்கப்படு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதுமான அளவு உரத்தை வழங்க முடியாதுள்ளதாக விவசாய பிரதிப் பணிப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித் துள்ளார்.

நெற்செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 90 கிலோ கிராம் யூரியா இடப்படவேண்டும் என விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்துள்ள பின்னணியிலேயே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எனினும், பயிர்களுக்கு இட வேண்டிய உரம் இன்னும் முறையாகக் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (அ)

# கைது செய்யப்பட்ட 120 வெளிநாட்டவர் விளக்கமறியலில்

கொழும்பு, மே. 05

இராஜகிரிய பகுதியில் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட 120 வெளிநாட் டினரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு புதுக் கடை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராஜகிரிய - மெதவெலி கட பகுதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 120 வெளிநாட்டவர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மற்றும் மலேசியா ஆகிய நாட்டவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# "கம்பன் புகழ்" விருது ஜனாதிபதி அநுரவுக்கு



கொழும்பு, மே. 05

அகில இலங்கை கம்பன் கழகத்தினர் ஆண்டுதோறும் வழங்கி வரும் உயரிய "கம்பன் புகழ்" விருது, 2026ஆம் ஆண்டுக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட் டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் மண்டபம் வளாகத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கம்பன் விழா 2026 இறுதி நாள் நிகழ்வில், "வரலாற்றை மாற்றியவன்" என்ற புகழாரத்துடன் இந்த விருது வழங்கப்பட்டது.

இனவேற்றுமையால் பிளவடைந்திருந்த நாட்டை ஒன்றுபடுத்துவதாக உறுதியளித்து ஜனாதிபதியாக பதவியேற்ற அவர், சிறுபான்மை சமூகங்களையும் இணைத்துக் கொண்டு நாட்டில் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளைப் பாராட்டும் வகையில் இந்த கௌரவம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை தொழிலதிபர் என்.எஸ். வாசு மங்கள விளக்கேற்றி தொடங்கி வைத்தார். நீதியரசர் பா. சசி மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், இந்தியாவின் பிரபல வைத்தியர் வைத்திய கலாநிதி முஹமட் ரேலா தொடக்க உரையாற்றினார்.

இதேவேளை, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய ஆறு முக்கிய நபர்களும் விருதுகள் பெற்று கௌரவிக்கப்பட்டனர்.

இதில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தொழிலதிபர் சி. தனபாலா, சிரேஷ்ட பொறியியலாளர் சி. உருத்திரலிங்கம், முன்னாள் செயலாளர் பிரதாப் இராமானுஜம், வைத்திய கலாநிதி "காப்பியக்கோ" ஜின்னாஹ் ஷரிபுத்தீன் மற்றும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அ. உமா மகேஸ்வரன் ஆகியோர் அடங்குவர்.

தனிப்பட்ட காரணங்களால் நிகழ்வில் கலந்து கொள்ளாத கரு ஜயசூரியவுக்கான விருதை, அவரது மருமகனும் முன்னாள் அமைச்சருமான நவீன் திசாநாயக்க மேடையில்பெற்றுக்கொண்டார்.

மேலும், இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி முன்னாள் மாநிலத் தலைவர் கு. அண்ணாமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இலக்கியம், கலை மற்றும் கலாசார மதிப்புகளை முன்னிறுத்திய இந்த விழாவில் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# சட்டத்தரணி சுகாஷ் எழுதிய தமிழன் கனவு புத்தகம் வெளியீடு





யாழ்ப்பாணம், மே. 05

தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி சுகாஷ் எழுதிய தமிழன் கனவு புத்தக வெளியீடு ஓய்வு பெற்ற நீதிபதி சிறீநிதி தலைமையில் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம்பெற்று வரவேற்புரை இடம்பெற்றன.

தொடர்ந்து புத்தகத்தை பிரிகேடியர் விதுசாவின் தாயார், மற்றும் முன்னாள் போராளி கிட்லர் ஆகியோர் வெளியீடு செய்து வைக்க நிகழ்வின் பிரதம விருந்தினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வாசு தேவ குருக்கள், யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் தூசிரா குலசிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி ஜோனி மதுரநாயகம், கலாநிதி குமாரவடிவேல் குருபரன், யாழ்ப்பாண பல்கலைக் கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன், சட்டத்தரணிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள் என நூற்றுக் கணக்கானோர் காலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.05.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், சித்திரை 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# விஜய்யின் தேர்தல் வெற்றியின் பரிமாணம்

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் நடிகர் ஜோசப் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் நூற்றுக்கும் அதிகமான ஆசனங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக மேலெழுந்திருக்கிறது. ஆனால், தனியாக அரசாங்கத்தை அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை (118) அந்த கட்சிக்கு கிடைக்கவில்லை. சுமார் ஏழு தசாப்தங்களாக மாநிலத்தை மாறிமாறி ஆட்சிசெய்த திராவிட முன்னேற்ற கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகமும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு வந்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் அண்ணா தலைமையில் தி.மு.க. 1967 ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசாங்கத்தை தோற்கடித்ததை அடுத்து தொடங்கிய திராவிட இயக்க கட்சிகளின் தொடர்ச்சியான எழுபது வருட ஆட்சிக்கு ஒரு குறுக்கீடு ஏற்பட்டிருக்கிறது. இந்த குறுக்கீடு திராவிட இயக்க ஆட்சியின் அஸ்தமனத்தின் தொடக்கமாக இருக்குமா இல்லையா என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல சொல்லும்.

தமிழ்நாட்டில் சினிமா நடிகர்கள் அரசியலில் பிரவேசிக்கும்போது உடனே அவரை அண்ணா தி.மு.க. தாபகரும் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி. ஆருடன் ஒப்பீடு செய்து விமர்சிப்பது வழமை. விஜய் இரு வருடங்களுக்கு முன்னர் தனது கட்சியை ஆரம்பித்த வேளையில் மாத்திரமல்ல, அண்மைய நாட்களில் சட்டசபை தேர்தல் பிரசார நாட்களின்போதும் அவ்வாறு விமர்சனம் வந்தது. கட்சியை தொடங்கிய உடனே ஆட்சியைப் பிடிப்பதைப் பற்றி பேசுகிறார்.விஜய். ஒரு எம்.ஜி.ஆர். அல்ல என்று கூறினார்கள்.

எம்.ஜி.ஆர். நீண்டகால அரசியல் ஈடுபாட்டுக்கு பிறகு அதுவும் தி.மு.க.வின் முக்கியமான தலைவர்களில் ஒருவராக விளங்கிய பின்னரே கருணாநிதியுடனான முரண்பாட்டையடுத்து தனிக்கட்சி அமைத்து ஆட்சியைப் பிடித்தார். கட்சியைத் தொடங்கிய பிறகு பல இடைத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றிகரமாக மக்கள் செல்வாக்கை பரீட்சித்தார்.

ஆனால், விஜய் கட்சியை தொடங்கிய இரண்டு வருடங்களில் 2024 பாராளுமன்ற தேர்தல் உட்பட எந்தவொரு தேர்தலிலும் ஏன் ஒரு பஞ்சாயத்து தேர்தலிலும் கூட மக்கள் ஆதரவைப் பரீட்சிக்கத் துணிச்சல் கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது. ஆனால், எம்.ஜி.ஆர். செய்யாததை இன்று விஜய் செய்துவிட்டார். முதன்முதலான தேர்தல் களமான சட்டசபை தேர்தலிலேயே அவர் வெற்றிபெற்று முதலமைச்சராக பதவியேற்கப்போகிறார்.

எம். ஜி.ஆரின் அண்ணா தி.மு.க. அதன் முதன் முதலான சட்டசபை தேர்தல்களத்தில் தனியாக இல்லாமல் வேறு சில கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே போட்டியிட்டார். ஆனால், விஜய் எந்தவொரு கட்சியுடன் கூட்டணி அமைக்காமல் தனியாகவே போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். அண்ணா தி.மு.க.49 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலாக சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றபோது 30.4 சதவீத வாக்குகளைப் பெற்றது. விஜய்யின் கட்சி அதன் முதல் தேர்தலில் சுமார் 35 சதவீதமான வாக்குகளைக் கைப்பற்றியிருக்கிறது.

தன்னுடன் கூட்டணி அமைக்க முன்வரும் கட்சியுடன் ஆட்சியதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு தயாராக இருப்பதாக விஜய் கடந்த வருடம் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மகாநாட்டில் அறிவித்தபோது எந்த வொரு கட்சியும் அதை கணக்கில் எடுக்கவில்லை. தற்போது அவரது கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை என்ற போதிலும், பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கும் நிலையில் அவர் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிப்பது குறித்து ஆராய்வதற்கு பல கட்சிகள் தயாராக இருப்பதாக செய்திகள் வருகின்றன.

மாநிலத்தின் அரைவாசி தொகுதிகளுக்கு விஜய் பிரசாரத்துக்குச் செல்லாமலேயே இந்த வெற்றியைப் பெற்றிருப்பது உண்மையில் ஒரு சாதனையே. எம்.ஜி. ஆருக்கு முன்னரும் பின்னரும் தமிழ்நாட்டில் பல சினிமா நடிகர்கள் அரசியலில் வந்தார்கள். ஆனால், அவர்களில் எவரும் முதலமைச்சராக வரவோ அல்லது பரந்தளவில் மக்கள் செல்வாக்கைப் பெற்று பெருமளவில் ஆசனங்களைக் கைப்பற்றவோ முடியவில்லை. ஜெயலலிதா எம்.ஜி. ஆரின் கட்சியை தனது ஆதிக்கதின் கீழ் கொண்டுவந்துதான் முதலமைச்சரானார்.

ஆனால், விஜய் மாத்திரமே எம்.ஜி.ஆருக்கு பிறகு சொந்தத்தில் கட்சியை ஆரம்பித்து ஆட்சியைப் பிடிக்கும் முதல் தமிழ் சினிமா நடிகராக சாதனை படைக்கிறார். விஜய் ஒரு எம்.ஜி.ஆர். அல்ல என்று கூறினார்கள், ஆம், அவர் தான் எம்.ஜி.ஆர். அல்ல, அவரை விடவும் வேறுபட்டவர் என்று சாதனை படைத்து நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

# கொளத்தூரில் ஸ்டாலின் ஏன் தோற்றார்?

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து முன்னிலை பெற்றுள்ளது.

தி.மு.க. 50 இற்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலை வகித்து வரும் நிலையில் தி.மு.க. தலை வர் ஸ்டாலின் அவரது கொளத்தூர் தொகுதியில் தோல்வியைச் சந்தித்துள்ளார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் வி.எஸ். பாபு 82,997 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.



இதற்கு முன்னதாக மு.க.ஸ்டா லின் 1984 மற்றும் 1991 சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஆயிரம் விளக்கு தொகுதியில் தோல்வியைச் சந்தித்திருந்தார். அவர் சந்திக்கும் மூன்றாவது தேர்தல் தோல்வி இது.

கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் ஸ்டாலின் கொளத்தூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக இருந்து வந்தார். இந்த முறை கொளத்தூர் தொகுதியில் சுயேச்சைகள் உள்பட மொத்தம் 35 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் அதிக அளவிலான வாக்காளர்கள் எண்ணிக்கை மாற்றம் கண்ட தொகுதிகளில் ஒன்றாக கொளத்தூரும் இருந்தது.

இந்த தொகுதியில் 2021 இல் 70,000க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருந்தார் ஸ்டாலின். தற்போது 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்திருக்கிறார்.

த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபு 2006 - 2011 காலகட்டத்தில் தி.மு.க. சார்பில் அப்போதைய புரசைவாக்கம் தொகுதியில் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர். அதன் பிறகு அ.தி.மு.கவில் இணைந்தார். 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக த.வெ.கவில் இணைந்த நிலையில் கொளத்தூர் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

வெற்றி சான்றிதழைப் பெற்ற பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வி.எஸ். பாபு, "விஜய் எந்த வழியில் செல்கிறாரோ அந்த வழியில் நாங்கள் தொண்டனாக இருந்து செயல்படுவோம்." என்றார்.

அதிக இடங்களில் த.வெ.க. முன்னிலை பெற்றுள்ளது குறித்த கேள்விக்கு, "எல்லா புகழும் தளபதிக்கே (விஜய்). வெற்றி பெற்றது நான் அல்ல, தளபதிதான். முழு வெற்றிக்கும் அவர்தான் காரணம். என் தொகுதியில் மக்களிடம் இருந்து லஞ்சம் பெறாமல் திட்டங்களை செயல்படுத்துவோம்." என்றார்.

தி.மு.கவிலிருந்து விலகியது குறித்த கேள்விக்குப் பதிலளித்தவர், "கட்சியிலிருந்து யாரும் வெளியேற்றவில்லை. நானாக தான் வெளியேறினேன்." எனத் தெரிவித்தார்.

முதலமைச்சரின் தொகுதி என்பதால் இயல்பாகவே நட்சத்திர தொகுதி என்கிற அந்தஸ்தை கொளத்தூர் பெற்றிருந்தது.

ஆனால் நட்சத்திர தொகுதிக்கு உரிய பரபரப்பு கொளத்தூர் தேர்தல் பிரசாரத்தில் தென்படவில்லை. இந்த முறை வட சென்னையில் தவெக மற்றும் விஜயின் வருகையால் கொளத்தூர், பெரம்பூர், திரு வி.க நகர், வில்லிவாக்கம் உள்ளிட்ட பல தொகுதிகள் நட்சத்திர தொகுதிகளாக ஊடக வெளிச்சம் பெற்று வந்தன.

ஆனால் பெரம்பூர், திரு வி.க நகர் போன்ற தொகுதிகளில் தென்பட்ட தேர்தல் தீவிரம் கொளத்தூரில் இருக்கவில்லை.

மற்ற தொகுதிகளில் கட்சிக் கொடிகள் மற்றும் போஸ்டர்கள் அதிக அளவில் இருந்த நிலையில் கொளத் தூர் தொகுதியில் மிகப்பெரிய அளவிலான பதாகைகளையோ விளம்பரங்களையோ பார்க்க முடியவில்லை.

"கொளத்தூர் தொகுதியில் எந்தக் கட்சிகளுமே தீவிர மான பிரசாரத்தில் ஈடுபடவில்லை. மாறாக தெருவோர பிரசாரங்கள், வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் பிரசா ரங்களிலே அதிகம் கவனம் செலுத்தின. முதல மைச்சருக்குச் செல்வாக்கு இருந்தாலும் அதை யும் மீறிய அடிப்படை பிரச்னைகள் தேர்த லில் முக்கியமான இடம் வகித்தன. இங்கு தொழில் வாய்ப்புகள் குறைவாக இருப்பதால் இளைஞர்கள் வேலைக்காக அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. ," என்கிறார் கொளத்தூர் தொகுதியைச் சேர்ந்த அலன்.

வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொளத்தூரில் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் பொதுமக்களுக்கான கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் சாலை வசதி, போக்குவரத்து நெரிசல், ஆக்கிரமிப்புகள் மற்றும் குடியிருப்பு பட்டா போன்ற பல அடிப்படைத் தேவைகளையும் மக்கள் முன்வைத்தனர்.

கொளத்தூர் தொகுதியில் மட்டும் 4,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், 40 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுமனை பட்டாவுக்காக காத்திருக்கிறார்கள் என சிவ சக்தி நகரைச் சேர்ந்த மெர்லின் தெரிவித்திருந்தார்.

கொளத்தூர் தொகுதியில் தி.மு.கவின் தோல்விக்கு மக்கள் மத்தியில் நிலவிய அதிருப்தியே காரணம் என்கிறார் கொளத்தூரைச் சேர்ந்தவரும் மாநில குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவருமான நீலகண்ணன்.

த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபு உள்ளூர் மக்களுக்கு அறியப்பட்டவராக இருந்தாலும் இது விஜய்க்காக விழுந்த வாக்குகள் என்று அவர் தெரிவித்தார்.

"இங்கு தி.மு.கவும் அ.தி.மு.கவும் தொடர்ந்து வெற்றி பெற்று வந்துள்ளன. அதனால் மக்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. முதல் முறையாக அவர்களின் எதிர்பார்ப்புக்கு இணங்க த.வெ.க. ஒரு மாற்றாக அமைந்தது. இந்த தேர்தலை தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பாக மக்கள் பார்த்த னர். வி.எஸ்.பாபு உள்ளூர் மக்களுக்கு அறியப் பட்டவர் தான் என்றாலும் இங்கு வேறு யார் நின்றிருந்தாலும் வென்றிருப்பார்கள்," என்றார் அவர்.

"விஜய் பேசிய மொழி மக்களை எளிதில் சென்றடைந்தது. வேட்பாளர்களைவிடவும் உள்ளாட்சி கவுன்சிலர்கள் மீதிருந்த அதிருப்தியே இந்த தேர்தல் முடிவுகளுக்கு காரணமாக இருந்தது. முதலமைச்சர் ஸ்டாலின் அவ்வப்போது தொகுதிக்கு வந்திருக்கிறார். மழைநீர் வடிகால் பணிகள் உட்பட பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார். அதைத் தாண்டியும் பல உள்கட்டமைப்பு தேவைகள் மற்றும் அதிருப்தி இருந்துள்ளது. மக்கள் அவரை முதலமைச் சராகவே பார்த்தனர், எம்.எல்.ஏ-வாக பார்க்கவில்லை." எனத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கிய மான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தி பேசுவார்கள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகார பதவிகளில் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்லசெய்தி வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தாரின் உணர்வுகளை புரிந்துக்கொண்டு அதற்கேற்ப செயல்படுவீர்கள்.பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். சொந்த பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விருந்தினரின் வருகை உண்டு. உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

முல்லைத்தீவு- கள்ளப்பாடு பகுதியிலிருந்து

# கடற்தொழிலுக்கு சென்று மாயமான இரு மீனவர்களும் பாதுகாப்பாக மீட்பு



முல்லைத்தீவு, மே 05

முல்லைத்தீவு- கள்ளப்பாடு பகுதியிலிருந்து கடற்தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் கரை திரும்பாத நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் மீனவர்களால் முன்னெடுக்கப்பட்ட போது அவர்கள் இயந்திர கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த நிலையில் அவர்களை மீனவர்கள் பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்துள்ளனர் கடந்த 2 ஆம் திகதி கள்ளப்பாடு கடற்கரையிலிருந்து படகு ஒன்றில் தொழிலுக்காகச் சென்ற குறித்த இரு மீனவர்களும், நேற்று முன்தினம் அதிகாலையாவது கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனாலும், நீண்ட நேரமாகியும் குறித்த இரு மீனவர்களும் படகும் கரை திரும்பவில்லை.

இந்த நிலையில், உறவினர்கள் மற்றும் சக மீனவர்கள் இணைந்து நேற்று முன்தினம் மாலை வரை நான்கு படகுகளில் சென்று தேடியும் அவர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து காணாமல் போன மீனவர்களையும் அவர்களது படகையும் தேடும் நோக்கில், முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்றுக் காலை மீனவர்கள் பல படகுகளில் சென்று தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது இயந்திர கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த நிலையில் அவர்களை மீனவர்கள் பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்தனர். (எ)

# பரமாச்சார்ய சுவாமிகள் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், மே 05

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த் "திருவிளையாடல் "புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்துச் சமயப் பெரியார்கள்" குருபூஜை நிறைவு விழா தொடர் 12 நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

குருபூஜை விழா தெல்லிப்பழை மாவைகலட்டி

அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைபில் நடைபெறவுள்ளது. ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சமூகமாமணி, கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நல்லை சிறீலசிறீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் குருபூஜை நிகழ்வை அடுத்து சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "சிறீலசிறீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின்சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும்

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மாணவர்களின் கலை நிகழ்வும், ஆன்மீக விருந்தினர் உரையைத் தொடர்ந்து குரு பூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# இலங்கை - மாலைதீவு இடையில் ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கொழும்பு, மே 05

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸு மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற அரச தலைவர்களுக்கிடையிலான சந்திப்பை தொடர்ந்து ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இதன்படி சுற்றுலாத் துறை, கல்வி மற்றும் உயர்கல்வி, சுகாதாரத் துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் அபிவிருத்தி, ஆவணக்காப்பகம் மற்றும் பாதுகாப்புத் துறை ஆகிய ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த உடன்படிக்கைகள் எட்டப்பட்டன. (எ)

# நாட்டின் சில பகுதிகளுக்கு கடும் மின்னல் தாக்கம்

கொழும்பு, மே 05

நாட்டின் சில பகுதிகளுக்கு கடும் மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் களுத்துறை, பொலநறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் கடும் மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. அத்துடன் இடைக்கிடையே பலத்த இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் சாத்தியம் நிலவுகிறது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இதன்படி இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மரங்களுக்கு அடியில் நிற்காமல், பாதுகாப்பான கட்டடங்களுக்குள் அல்லது மூடிய இடங்களுக்குள் இருக்கவும். (எ)

## திருமந்திர சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 05

தெல்லிப்பழை மாவைக் கலட்டி அருள்மிகு நாக தம்பிரான் தேவஸ்தானத்தில்

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 04 எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், திருவாசகப் பிரியன் ச. நவநீதன் "அனுபவ ஞானத் திருநூல்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முழு நாடுமே ஒன்றாக தேசிய திட்டம்: 899 பேர் போதைப்பொருட்களுடன் கைது

கொழும்பு, மே 05

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 899 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 08 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 22 பேரும் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 928 சோதனைகள் நடத்தப்பட்டதுடன் ஒருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டார்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய சந்தேகநபர்களிடமிருந்து 335 கிராம் ஹெரோயின், 493 கிராம் ஐஸ், 65 கிலோ 240 கிராம் கஞ்சா, 11,275 கஞ்சா செடிகள், 190 கிராம் குஷ் ரக போதைப்பொ ருள்,16 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,289 போதை மாத்திரைகள், 222 கிராம் மதனமோதகம் மற்றும் 76 கிராம் மாவா போதைப பொருள் என்பன கைப்பற்றப் பட் டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 548 பேர் கைது!

கொழும்பு, மே 05

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 548 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 26,346 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 147 பேர்குற்றங்களுடன்தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 212 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 158 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 135 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 83 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3996 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் . (எ)

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு: பொலிஸாரால் 7 சந்தேகநபர்கள் கைது

நுவரெலியா, மே 05

நுவரெலியா - நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹளுவெல்ல பகுதியில் உரிய அனுமதியின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 07 சந்தேகநபர்கள் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நோர்வூட் மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த 24 முதல் 43 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். நோர்வூட் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சட்டவிரோத மதுபானத்துடன் மூவர் கைது!

கொழும்பு, மே 05

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின்போது சட்டவிரோத மதுபானத்துடன் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 60 லீற்றர் (80 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.


இதேவேளை, கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனுராகொட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 101 லீற்றர் 250 மில்லிலீற்றர் (135 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பெபிலியவல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அத்துடன், ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொடிவீகும்பூர பகுதியில் வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 108 லீற்றர் 750 மில்லிலீற்றர் (145 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ)

# சட்டவிரோத மீன்பிடி மேலும் 77 பேர் கைது!

**வெடிபொருட்கள் உட்பட பல பொருட்கள் பறிமுதல்**



கொழும்பு, மே 05

இலங்கை கடற்படை, கடலோர பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மீன்வளம் மற்றும் நீர்வளத் திணைக்களம் ஆகியவை இணைந்து நீர்ப்பரப்புகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 77 நபர்கள், வெடிபொருட்களுடன் கூடிய 17 டிங்கிகள் மற்றும் 06 டிராக்டர்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி திருகோணமலை, கந்தளாய், வாழைச்சேனை, கல்லராவ, கிண்ணியா, துடுவ, காயங்கேணி, போல்ட் பொயின்ட், சம்பூர், சிலாவத்தை இறக்கக் கண்டி, முகத்துவாரம், பனிச்சங்கேணி, நந்திக்கடல் களப்பு, யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணி, பருத்தித்துறை, மன்னார் சவாரிபுரம் ஆகிய கரையோரங்களையும் கடற்பரப்புகளையும் உள்ளடக்கியதாக கிழக்கு, வடக்கு மற்றும் வடமேற்கு கடற்படைக் கட்டளைகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 77 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கடலட்டைகள், வெடிபொருட்கள், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், டிராக்டர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகள் ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோகிலாய், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வாழைச்சேனை, குச்சவெளி, சிலாவத்துறை மற்றும் கிண்ணியாவில் உள்ள மீன்வளம் மற்றும் நீர்வளத் திணைக்கள அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதையும், கடல் வளங்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு, கடற்படையானது எதிர்காலத்திலும் இத்தகைய செயல்பாடுகளைத் தடையின்றித் தொடர்ந்து செயல்படுத்தத் தயாராகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதே அரசின் முதன்மை நோக்கம்

## கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு




மட்டக்களப்பு, மே 05

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதே அரசின் முதன்மை நோக்கம் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தை தாக்கிய "டித்வா" புயலால் பாதிக்கப்பட்ட கால்நடை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு, கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியின் கீழ், மாகாணத்தின் மூன்று மாவட்டங்களான (மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை) உட்பட 2000-இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 845 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இழப்பீடு வழங்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 905 கால்நடை விவசாயிகள் இழப்பீடு பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் அதற் காக ரூ. 270 மில்லியனுக்கும் அதிகமான தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் போது உரையாற்றிய ஆளுநர், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதே அரசின் முதன்மை நோக்கம் என்று வலியுறுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாகாண சபை அதிகாரிகள், மாவட்ட செயலாளர் மற்றும் அரச அதிகாரிகள் குழுவினரும் கலந்துகொண்டனர். (எ-12)

# விபத்தில் சிக்கிய இருவர் பலி!

கொழும்பு, மே 05

கொட்டாவ வீதியில் பழைய சந்தி பகுதியில் அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் வழுக்கிச் சென்று மதில் ஒன்றில் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் சாரதியும் பின்னால் அமர்ந்து சென்றவரும் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் மாலபே பகுதியிலுள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி அறிவியல் துறையில் கற்று வந்த 20 வயது இளைஞன் ஒருவரும் ஹோமாகம பகுதியிலுள்ள வாகன திருத்தகம் ஒன்றில் பணியாற்றி வந்த மற்றுமொரு இளைஞனுமாவார்.

உயிரிழந்த இருவரும் மேலும் சில மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுடன் இணைந்து, கொட்டாவையிலிருந்து அத்துருகிரிய நோக்கி நேற்று அதிகாலை 2 மணியளவில் பயணித்துக் கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கண்டியில் துப்பாக்கிச்சூடு: நபர் ஒருவர் காயம்


கண்டி, மே 05

கண்டி - கட்டுகஸ்தோட்டை, குஹாகொட பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபர் ஒருவர் காயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் கண்டி தேசிய மருத்துவமனையின் சுத்திகரிப்புப் பிரிவு மேற்பார்வையாளர் என அடையாளம் காணப்பட்டார்.

காயமடைந்த நபர் சிகிச்சைக்காக கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (எ)

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்



கொழும்பு, மே 05

இந்திய கடற்படையின் **'INS SINDHUKESARI'** நீர்மூழ்கிக் கப்பல், செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து, இலங்கை கடற்படையானது கடற்படை மரபுகளின்படி அந்த நீர்மூழ்கிக் கப்பலை வரவேற்றது.

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள இந்தியக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பலான **'INS SINDHUKE SARI'** தீவில் தங்கியிருக்கும் காலத்தில், இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் நீர்மூழ்கிக் கப்பலின் குழுவினர் பங்கேற்பதுடன், இலங்கையில் உள்ள பல முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கும் செல்லவுள்ளனர். (எ)

# ஹற்றன் - மஸ்கெலியா வீதியில் திடீரென தீ பற்றி எரிந்த ஓட்டோ



ஹற்றன், மே 05

நல்லதண்ணி பகுதியிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த ஓட்டோ இயந்திர பகுதியில் திங்கட்கிழமை திடீரென தீப் பிடித்ததாக ஹற்றன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹற்றன் - மஸ்கெலியா பிரதான வீதியில் டிக்கோயா தோட்டப் பகுதியில் காலை இந்த விபத்து நிகழ்ந்தது.

பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த ஓட்டோவில் எரிபொருள் கசிவு மற்றும் இயந்திர கோளாறு காரணமாக தீப்பற்றி எரிந்தது. இதில் பயணித்துக் கொண்டிருந்த பயணியும் சாரதியும் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டனர்.

தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும், ஓட்டோ இயந்திர பகுதி கடுமையாக சேதமடைந்தது. ஓட்டோ தீப்பிடித்த போது சாரதியும் மற்றும் மற்றொரு பயணி மட்டுமே அதில் பயணித்ததாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# யானை தாக்குதலில் முதியவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே 05

கரடியனாறு பொலிஸ் பிரிவு, எரலாங்குளம் கிராம அலுவலர் பிரிவு- நெல் வயல்களில் பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த முதியவர் ஒருவர் யானை தாக்கு தலில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 76 வயது முதியவர் என அடையாளம் காணப்பட்டார்.

இருப்பினும் உயிரிழந்தவரின் மருமகன் இந்த விபத்து நேற்று அதிகாலையில் நடந்திருக்கலாம் என்று கூறி கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் கூறியுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தனர். (எ)

# கைத்துப்பாக்கி, ஐஸ் போதைப்பொருளுடன் பாதாள கும்பலை சேர்ந்த இருவர் சிக்கினர்!

கொழும்பு, மே 05

காலி - அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலபிட்டிய பகுதியில் வெளிநாட்டுத் தயாரிப்பு பிஸ்டல் ரக கைத்துப்பாக்கி உள்ளிட்ட பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அஹூங்கல்ல பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டுத் தயாரிப்பு பிஸ்டல் ரக கைத் துப்பாக்கி ஒன்று, அதன் மகசின், 16 தோட்டாக்கள் மற்றும் 11 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட் டுள்ளன.

சந்தேகநபர் பலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கியை சில நாட்களுக்கு முன்னர் சந்தேக நபருக்கு வழங்கியதாகக் கூறப்படும் மற்றொருவர் நேற்று முன்தினம் இரவு அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவின் வாதுவை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர்கள் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வருபவர்கள் என்பதும், ஏதேனும் குற்றச் செயலைச் புரிவதற்காக இவர்களுக்கு இந்தப் துப்பாக்கி வழங்கப்பட்டிருப்பதும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 06

நாட்டின் இருவேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் சிறுமி ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹெரயாய - சிறிபுரகம வீதியின் 02ஆம் மைல்கல்லிற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

சிறிபுரகம நோக்கிப் பயணித்த பஸ் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மற்றும் அதில் பயணித்த சிறுமி ஆகியோர் பலத்த காயமடைந்து தெஹிகஸ்ஹந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது சிறுமி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை சிறிகல மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் எத்திலிவெவ பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமி என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்துருகிரிய - கொட்டாவ வீதியின் பழைய சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

- கொட்டாவ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்தவர் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரி ழந்தனர்.

உயிரிழந்தவர்கள் மெதிரிகிரிய மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர்கள் என்று தெரியவந்துள்ளது. இந்த விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழில் பறந்தது...

ஆதரவாளர் கள் வெற்றி கொண்டாட் டத்தில் ஈடுபட் டனர்.

யாழ்ப்பாணம் - காக் கைதீவு பகுதியில் நேற்று தமி ழக வெற்றிக் கழகத் தின் கொடிகள் பறக்க விடப்பட் டன. (அ-05)

## தி.மு.கவின் கோட்டை...

2011 ஆம் ஆண்டு முதல் மு.க. ஸ்டாலின் பிரதிநிதித் துவப்படுத்தி வந்த இந்த பலமான தொகுதியில், வி.எஸ். பாபு இந்த மாபெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த 2011 முதல் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த கொளத்தூர் தொகுதியில், தவெகவின் வருகை மற்றும் புதிய கூட்டணி பலம் காரணமாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் முடிவு வெளியாகியுள் ளது.

75 வயதான வி.எஸ். பாபு, இதற்கு முன்பு தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளில் முக்கிய பொறுப் புகளை வகித்துள்ளார்.

2006 முதல் 2011 வரை புரசைவாக்கம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய அவர், தற்போது தவெகவின் இணைப் பொதுச்செயலாளராக உள்ளார்.

## விஜய்க்கு மோடி...

தெரிவித்துள்ளார்.

"த.வெ.கவின் ஈர்க்கக்கூடிய செயல்திறனுக்கு எனது பாராட்டுகள். தமிழகத்தின் முன்னேற்றத்துக்காகவும் மக்களின் நலனுக்காகவும் அனைத்து விதத்திலும் மத் திய அரசு ஆதரவு வழங்கும்.

மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதிலும் அவர் களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் நாங் கள் எப்போதும் முன்னணியில் இருப்போம்" என மோடி குறிப்பிட்டுள்ளார். (அ)

## கணினி தொலைபேசி...

சிம் அட்டைகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங் கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இந்த நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் தற் போது தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் குறித்து அனைத்து கோணங்களிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், திறைசேரியின் இந்த ஆழமான நிதி மோசடி தொடர்பாக, வரவிருக்கும் நாடாளுமன்ற அமர்வில் அர சாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தீர்ந்த கூட்டமொன்றை அழைத்து, கணக்காய்வாளர் நாயகத்துடன் விசாரணை களை ஆரம்பிக்குமாறு "பிரீ லோயர்ஸ்" அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடை யதாகக் கூறப்படும், வெளிநாட்டு வளங்கள் திணைக்க ளத்தின் உதவிப் பணிப்பாளர் ரங்க நிஷாந்த ராஜபக்ஷ கடந்த 30ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

முதல் தேர்தலிலேயே 34.9 சதவீதம்:

# கடந்த 25 ஆண்டுகளில் எந்த கட்சியும் செய்யாத சாதனை படைத்தார் விஜய்!

சென்னை, மே. 05

இந்திய அரசியலில் ஒரு புதிய கட்சி தொடங்கப்பட்டு, சில காலத்திலேயே மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சியைப் பிடிப்பது என்பது மிகப்பெரிய சாதனையா கக் கருதப்படுகிறது. அந்த வகையில் எம்.ஜி.ஆர், என்.டி. ஆர் மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோரை தொடர்ந்து விஜய் இப்போது அந்த சாதனையை படைத்து இருக்கி றார்.

தி.மு.க.விலிருந்து விலகி 1972 இல் அ.தி.மு.க.வை தொடங்கிய எம்.ஜி.ஆர், 1977ஆம் ஆண்டு தனது பொதுத் தேர்தலை சந்தித்தார். அதில் அ.தி.மு.க. 155 தொகுதிக ளில் போட்டியிட்டு, 130 வெற்றி பெற்று தனிப்பெரும் பான்மையுடன் ஆட்சி அமைத்தது. மொத்தம் 30.36 சதவீத வாக்குகளைப் பெற்றது. ஆந்திர அரசியலில் 1983-இல் நடைபெற்ற மாற்றம் இந்தியாவையே உலுக்கி யது. கட்சி தொடங்கிய 9 மாதங்களிலேயே என்.டி.ஆர் ஆட்சியைப் பிடித்தார். அவரது தெலுங்கு தேச கட்சி 289 தொகுதிகளில் போட்டி, 201 இடங்களில் அபார வெற்றி பெற்றது. மொத்தம் 46.30 சதவீதம் வாக்குக ளைக் குவித்து காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்தது.

ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் விளைவாக 2012 இல் தொடங்கப்பட்ட ஆம் ஆத்மி கட்சி, 2013 டில்லி சட்டமன்றத் தேர்தலில் முதன்முதலாகக் களம் கண்டது. 70 தொகுதிகளில் போட்டியிட்டு 28ல் வென் றது. மொத்தம் 29.49 சதவீத வாக்குகளை பெற்றது. அந்த கட்சிக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காத போதிலும், காங்கிரசின் வெளிப்படையான ஆதரவுடன் முதல் தேர்தலிலேயே அரவிந்த் கெஜ்ரிவால் முதலமைச் சராக பொறுப்பேற்றார். அந்த பட்டியலில் 4ஆவது விஜய் இடம் பிடித்துள்ளார். கடந்த 2024ஆம் ஆண்டு கட்சி தொடங்கி விஜய், 2 ஆண்டுகளில் தனது முதல் சட்டசபை தேர்தலிலேயே 233 தொகுதிகளில் தனித்து களம் கண்டு 110 தொகுதிகளில் வெற்றி பெறுகிறார். அவருக்கு தனிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும், அவருக்கு சில கட்சிகள் ஆதரவு தர இருப்பதால் விஜய் முதலமைச்சராக பொறுப்பேற்கிறார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அளவில் விஜய் இன்னொரு சாதனையும் படைத்து இருக்கிறார். கடந்த 2000 ஆம் ஆண்டுக்கு பிறகு கட்சி தொடங்கி சந்தித்த முதல் தேர்தலிலேயே அதிக வெற்றி பெற்று விஜய் சாதனை படைத்துள்ளார். (அ)

## கட்டுப்பணம் இழந்த...

சட்டசபை செல்ல வேண்டும் என்பதில் சீமான் தீவிர முனைப்பு காட்டினார். ஆயினும் அவர் படுதோல்வி அடைந்துள்ளார்.

தேர்தலில் அதிகம் எதிர்பார்க்கப்படும் தொகுதிகளில் ஒன்றாக காரைக்குடி தொகுதி மாறி இருந்தது. அதற்கு முக்கிய காரணமாக நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பா ளர் சீமான் காரைக்குடி தொகுதியில் களமிறங்கி இருந்தார்.

## ரங்க நிஷாந்த...

கூறியிருந்த நிலையில், மருத்துவக் குழுவினர் ஏதேனும் அரசியல் அழுத்தங்களுக்கு உள்ளாகினார்களா என்ற சந்தேகம் எழுவதாகவும், கத்தியில் இருந்த கைரேகைகள் மற்றும் ஆடைகளில் இருந்த இரத்தக் கறைகள் ரங்க நிஷாந்தவுக்கு உரியவை தானா என்பது உறுதிப்படுத்தப் படாமல் அவசர அவசரமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் சாடினார்.

அத்துடன், இந்த மரணப் பரிசோதனையை மேற் கொண்ட குழுவில் தற்போதைய அரசாங்கத்தின் அரசி யல் ஆதரவாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் நண்பர் கள் உள்வாங்கப்பட்டுள்ளமை அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, தற்போதைய அறிக்கையை நிரா கரிப்பதாகத் தெரிவித்த அவர், நாட்டின் சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிகள் மூவர் அடங்கிய புதிய சுயாதீனக் குழுவொன்றின் ஊடாக மீளவும் மரணப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி னார். (அ)

## சிறை அதிகாரி...

இதேவேளை, அண்மையில் மெகசின் சிறைச்சாலையி லும் கைதி ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தி ருந்த நிலையில், தற்போது வெலிக்கடை சிறையிலும் இவ்வாறானதொரு மரணம் சம்பவித்துள்ளமை சிறைச் சாலைகளின் பாதுகாப்பு மற்றும் கைதிகளின் மனித உரி மைகள் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

இச்சம்பவம் குறித்து சிறைச்சாலைகள் திணைக்களம் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது. (அ)

## தேசிய ஒற்றுமை...

வலியுறுத்தினார்.

நேற்று முன் தினம் மாலை வெள்ளவத்தை இராமகி ருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற 'கம்பன் விழா'வில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் தார்.

தமிழ் மக்களின் முக்கிய இலக்கிய மற்றும் கலாச்சார விழாவான கம்பன் விழாவில் கலந்துகொண்ட ஜனாதி பதி பாரம்பரிய இந்து சம்பிரதாயங்களுடன் வரவேற்கப் பட்டார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மனித நேயத்தை முன்னிறுத்திய புதிய சமூகத்தை உருவாக்குவ தில் இலக்கியத்திற்கும் கலாச்சாரத்திற்கும் மகத்தான பொறுப்பு உள்ளது என்று மேலும் குறிப்பிட்டார். (அ)

## மன்னாரில் மலசல...

மன்னாரைச் சேர்ந்த அருள் சேயா டெனீஸ்வரன் (வயது 38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 2ஆம் திகதி படுகொலை செய் யப்பட்டு சடலம் துண்டாடப்பட்டு மலசல கூடக் குழிக் குள் போடப்பட்டு இருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

குறித்த சம்பவம் தொடர்பில் சடலமாக மீட்கப்பட் டவரின் மனைவி சந்தேகத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## செம்மணி புதைகுழிக்...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ் வுப் பணியின் 7ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று திங் கட்கிழமை நடைபெற்றன.

அதன்போது 4 என்புக்கூட்டு தொகுதிகள் அடையா ளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையா ளம் காணப்பட்ட என்புக்கூட்டு தொகுதியில் குழந்தை ஒன்றின் என்பு கூட்டு தொகுதி உட்பட 4 என்புக்கூட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதி யில் செம்மணி மனிதப் புதைகுழியில், 250 மனித என்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 247 மனித என்புக்கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

அதேவேளை, சில சான்று பொருட்களும் அடையா ளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றை சுத்தம் செய் யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை இன்று செவ்வாய்க்கிழமை அகழ்ந்து எடுக்கப்படும் என் றும், அதன் பின்னரே அவை தொடர்பில் தெரிவிக்கப்ப டும் என சட்டத்தரணி ஞா.ரனித்தா தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்...

என்றாலும், தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக் கும் அளவுக்கு த.வெ.க.வுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அதாவது, மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 118 தொகு திகளில் வெற்றி பெற்றால்தான், ஒரு கட்சிக்கு தனிப்பெரும் பான்மை கிடைக்கும். ஆனால், த.வெ.க. 108 தொகுதிக ளில்தான் முன்னிலை வகிக்கிறது. த.வெ.க.வுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

த.வெ.க. தலைவர் விஜய், தான் போட்டியிட்ட பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறார். இதில், ஒன்றை இராஜினாமா செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், தொகுதிகளின் எண்ணிக்கையில் ஒன்று குறையும்.

அதே நேரத்தில், அக்கட்சியில் வெற்றி பெற்ற வேட் பாளர்களில் ஒருவர் சபாநாயகராக நியமிக்கப்படவேண் டும். நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, சபாநாயகர் வாக்களிக்க முடியாது என்பதால், மேலும் ஒரு இடம் குறையும். அப்படி, பார்க்கும்போது, த.வெ.க.வுக்கு பெரும்பான்மையை நிரூபிக்க மேலும் 12 உறுப்பினர்க ளின் ஆதரவு தேவை. தற்போதைய நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 6 இடங்களும், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள் வீதம் 4 இடங்களும், தே.மு.தி.க.வுக்கு 1 இடமும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு 2 இடங்க ளும், விடுதலை சிறுத்தை கட்சிக்கு 2 இடங்களும் கிடைத் துள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க.விற்கு 4 இடங்களும், பா.ஜ.க.வுக்கு 1 இடமும், அ.ம.மு.க.வுக்கு 1 இடமும் கிடைத்துள்ளன. தி.மு.க., அ.தி.மு.க. இரு கூட்டணிகளிலும் உள்ள பிற கட்சிகளின் ஆதரவு கிடைத் தால், த.வெ.க.விற்கு கூடுதலாக 21 இடங்கள் கிடைக்கும். அதன்படி கணக்கிடும்போது 108,21 என்றளவில் 129 இடங்களை பெற முடியும். ஆனால், அவ்வளவு கட்சிக ளின் ஆதரவும் த.வெ.க.வுக்கு தேவையில்லை. 12 உறுப் பினர்களின் ஆதரவே போதுமானது.

இந்த கணக்கு ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் தமி ழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் இன்று சென்னை கிண்டி யில் உள்ள மக்கள் மாளிகைக்கு வருகை தருகிறார். தமிழ கத்தில் ஆட்சி அமைக்க த.வெ.க.வுக்கு 2 வாய்ப்புகளை அவர் வழங்குவார். ஒன்று, த.வெ.க. தலைவர் விஜய்யை அழைத்து, சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க கூறுவார். அல்லது, தனக்கு ஆதரவு தரும் கட்சிகளிடம் இருந்து கடிதங்களை பெற்று, அதை தன்னிடம் வழங்கும் படி சொல்வார். 118 இடங்களுக்கு மேல் ஆதரவு கிடைத் தால், த.வெ.க.வுக்கு ஆட்சி அமைக்கும் உரிமையை ஆளு நர் வழங்குவார்.

அவ்வாறு ஆதரவு கிடைக்காமல் போனால், த.வெ. க.வுக்கு ஆட்சி அமைக்கும் உரிமை கிடைக்காமல் போகும். அதுபோன்ற நிலைமை ஏற்பட்டால், இரண்டாவதாக அதிக இடங்களை பெற்றுள்ள தி.மு.க.வை ஆட்சி அமைக்க ஆளுநர் கோருவார். அவர்களாலும் ஆட்சி அமைக்க முடியாமல் போனால், அடுத்த 6 மாதங்கள் தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி நடைபெறும். அதன் பின் னர் சட்டசபை தேர்தல் 234 தொகுதிகளுக்கும் மீண்டும் நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# அரசின் புதிய வரிக் கொள்கையை கடுமையாக விமர்சிக்கிறார் சஜித்!

## பொருளாதார நசுக்கல் என்றும் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 05

அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ள புதிய பெறுமதிசேர்வரி மாற்றங்கள் மற்றும் அதன் கொள்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அதன்படி ,ஜூலை 1ஆம் திகதி முதல் வரி வலையை விரிவுபடுத்துதல், வரி விகிதங்களை உயர்த்துதல் மற்றும் கடுமையான அமுலாக்க நடவடிக்கைகள் போன்றவற்றை அரசாங்கம் ஒரே நேரத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



புதிய வரி மாற்றங்கள் காரணமாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வரிச் சட்டகத்திற்குள் கொண்டுவரப்படும் எனவும், நிதிச் சேவைகள் அதிக வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படும் எனவும், டிஜிற்றல் பொருளாதாரமும் பெறுமதிசேர் வரி முறையின் கீழ் உள்ளடக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஒட்டுமொத்த இணக்கப்பாட்டு கடமைகளும் அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இந்த நடவடிக்கைகள் வெறும் சீர்திருத்தங்கள் அல்ல, மாறாகப் பொருளாதாரத்தை நசுக்கும் "பறிப்பு" என அவர் விமர்சித்துள்ளதோடு அதிக வரிகளை விதிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

வணிகங்கள் இயங்குவதற்கும் இடமளிக்க வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் இறுதியில் வரி விதிக்க எதுவுமே எஞ்சியிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்காது

கொழும்பு, மே. 05

எரிபொருளுக்கான விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள 12 முதல் 15 ரூபாய் வரையிலான அதிகரிப்பு, உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்குமாறு கோருவதற்குரிய நியாயமான காரணி அல்லவென அவர் கூறினார்.

அதற்கமைய, விலையை அதிகரிக்கவேண்டாம் என உணவக உரிமையாளர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அதிக கட்டணம் வசூலிக்கும் உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும், எதிர்காலத்தில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டால், உணவுப் பொருள்களின் விலையை மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல்கள் தேவைப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சந்தை நிலவரங்களின் அடிப்படையில், உணவுப் பொருள்களின் விலையை அதிகரிப்பதற்கான எந்த நியாயமும் இல்லை என்றும் அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# யாழ். மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக வைத்தியர் மயூரதன்

யாழ்ப்பாணம், மே. 05



யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உருத்திரபசுபதி மயூரதன் நேற்று முன் தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விசேட நிகழ்வில் அவர் தனது பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஓட்டோ கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, மே. 05

ஓட்டோ கட்டணங்களிலும் குறிப்பிட்ட அளவு அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என தேசிய ஒருங்கிணைந்த ஓட்டோ சாரதிகள் மற்றும் தொழிலதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எல். ரோஹண பெரேரா தெரிவித்துள்ளார்.

பெற்றோல் விலை 12 ரூபாயினால் அதிகரித்துள்ளதால், இந்த கட்டணத் திருத்தம் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஓட்டோ கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவதால், எரிபொருள் விலை உயர்வை கவனத்தில் கொண்டு, தற்போது இரண்டாவது கிலோ மீற்றருக்கு வசூலிக்கப்படும் 90 ரூபாய் கட்டணத்தை 10 ரூபாயினால் உயர்த்துமாறு தாம் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது முதல் கிலோ மீற்றருக்கு 100 ரூபாயும், இரண்டாவது கிலோ மீற்றருக்கு 90 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. எனவே, இரண்டாவது கிலோ மீற்றருக்கான கட்டணத்தையும் 100 ரூபாயாக உயர்த்துவது அத்தியாவசியமானது என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஓட்டோ உரிமையாளர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதில் எரிபொருள் கட்டுப்பாடுகள் காரணமாக கடும் சிரமங்களை எதிர்நோக்குவதால், அவர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

# துரித உணவுகளுக்கு தடை? தீவிரமாக ஆராய்கிறது அரசு

கொழும்பு, மே. 05

ஆரோக்கியத்திற்குத் தீங்கான துரித உணவுகளை முழுமையாகத் தடை செய்வது அல்லது முறைப்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வானிலை மற்றும் பாரம்பரிய விவசாய முறைகள் காரணமாக இயற்கையான சத்துமிக்க உணவுகள் கிடைக்கப்பெற்றாலும், ஆரோக்கியமற்ற அல்லது குறைந்த சத்துடைய உணவுகளின் நுகர்வு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன தெரிவித்தார்.

சிறுவர்கள் துரித உணவுகளுக்கு அடிமையாகி வருவதாகவும், அதே நேரத்தில் பல அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் உணவைத் தவிர்ப்பதுடன், ஊட்டச்சத்து இல்லாத அல்லது மிகக் குறைந்த ஊட்டச்சத்துள்ள துரித உணவுகளைத் தேர்ந்தெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தடை அவசியமானதாக இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் சிக்கலானது என்றும், இந்த முடிவுகள் எளிதாக அரசியல் மயப்படுத்தப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், இந்த உணவுகளைத் தடை செய்வது அல்லது முறைப்படுத்துவது குறித்து அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

வயம்ப பல்கலைக்கழகத்தின் ஊட்டச்சத்து பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரேணுகா சில்வாவின் ஆய்வின் அடிப்படையில் இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# யாழில் பொய்களைக் கூறுவதை அமைச்சர் பிமல் நிறுத்தவேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 05

நயினாதீவு மற்றும் நாகவிகாரை பிக்குமாரே தையிட்டி விகாரை சட்டவிரோதமானது என தெரிவித்த பின்னரும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழில் பொய்களைக் கூறுவதை நிறுத்தவேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் சட்டத்தரணி சுகாஷ் எழுதிய தமிழன் கனவு நூல் வெளியீட்டில் பிரதம விருந்தினர் உரையை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் காணிகளை சட்டவிரோதமான முறையில் அபகரித்து தையிட்டியில் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுமானத்துக்கு எதிராக போராடும் மக்களுக்கு குரல் கொடுப்பதை யாழ். மே தின கூட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இனவாதம் என்கிறார்.

மக்களின் காணியை மக்களுக்கே தெரியாமல் இராணுவத்தினர் சட்டவிரோதமாக பிடித்து கட்டுமானம் ஒன்றைக் கட்டி அதற்கு திஸ்ஸ விகாரை என்ற பெயரை வைத்துள்ளனர்.

இந்த விகாரை சட்ட விரோதமான முறையில் தனியார் காணிகளை அபகரித்து கட்டப்பட்டுள்ளது எனத் தெளிவாக நயினாதீவு விகாராதிபதியும் யாழ். நாக விகாரை விகாராதியும் ஏற்கனவே தெளிவாக கூறிவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் அறிந்து விட்டு அறியாதவர் போல் தையிட்டி விவகாரத்தில் தமிழ்க் கட்சி இனவாதமாக செயல்படுகிறது என மேடையில் பேசுகிறார்.

தையிட்டியில் மக்களின் காணியை திருட்டுத்தனமாக அபகரித்து கட்டப்பட்ட சட்ட விரோத கட்டுமானத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் நாமும் தமிழ் தேசிய பேரவையும் ஆதரவை வழங்கி அவர்களுடன் நில உரிமைக்கான போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

இதனைப் பொறுக்க முடியாத தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மே தின கூட்டத்தில் தையிட்டி காணி அளவீட்டை இனவாத தமிழ்த் தலைமைகள் குழப்புவதாக ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறார்.

மக்களின் காணியை அபகரித்ததை மக்களிடம் திருப்பிக் கொடுக்க முடியாத அரசாங்கம் அதற்கு எதிராக மக்களுடன் சேர்ந்து போராடும் எம்மை இனவாதிகள் என்கிறார்கள்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் இருக்கின்ற நிலையில் அவர்களிடம் நான் ஒரு கோரிக்கையை முன் வைக்கிறேன்.

தையிட்டி மக்கள் தமது நிலத்துக்காக போராடுகிறார்கள். அவர்கள் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் சிலர் மட்டும் அவர்களின் போராட்டத்தோடு தொடர்ந்தும் பயணிக்கின்றனர்.

சட்டத்தரணிகளுக்கும் பாரிய பொறுப்பு இருக்கிறது. நீதிமன்றத்தில் சட்டத்தை பேச வேண்டும் அல்லது மக்களிடம் சட்டம் தொடர்பான அறிவை போதிக்க வேண்டும்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால், நிலத்தை இழந்த மக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராடும்போது அரசியல் சாயம் பூசப்படுகிறது. நீங்கள் சட்டத்தரணிகள் அந்தப் போராட்டத்துக்கு சென்று மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள். அதை நீங்கள் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறது-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.